**கவனிக்க.-** *2023.12.15 ஆந் திகதிய 2363 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி பகுதி II (தமிழ் மொழி மூலம்), பகுதி III மற்றும் பகுதி IV(அ) (தமிழ் மொழிமூலம்) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2364 - 2023 දෙසැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2023.12.22**

*2364 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 554 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 557 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2024, சனவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

553 - B 82525- 353 (2023/12)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 வது வாசகத்தின் 4 வது உப வாசகத்தின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் (104 வது வாசகத்தின் கீழான அறிவித்தல்).

ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தில் புத்தல பிரதேச செயலகப் பிரிவின் உதவி காணி ஆணையாளர் (உள்ளூராட்சி) ஆர். எம். ஆர். எஸ். திலக்கரத்ன ஆகிய நான் காணி புனரமைப்பு கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப வாசத்தின் கீழ் அதிமேதகு சனாதிபதியினால் 1997 ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி கையளிக்கப்பட்ட இலக்கம் மொ/பிர 34413 அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளர் ஆகிய ஜயசேகர முதியன்சேலாகே சந்ராணி எனும் பெயரில் வழங்கப்பட்ட மொனராகலை மாவட்ட பதிவாளர் காரியாலயத்தின் LDO/M37/47 இலக்கத்தின் கீழ் 1997.08.27 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி அடுத்துறுபவரின் சட்டபூர்வ உரிமை இல்லாதவிடத்து அல்லது உரிமையாளர் இருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அவரின் அடுத்துறுபவர்களுக்கு ஒப்படைப்பதற்கு விருப்பமில்லையாயின் அடுத்துறுபவரை நியமித்துக் கொள்ள முடியாது என்பதை அறிவிப்பதுடன். அவ் அளிப்புப் பத்திரத்திற்குரிய சட்டவாக்கம் 104 வது வாசகத்தின் கீழ் இரத்துச் செய்வதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்படுமென இத்தால் அறிவிக்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புகள் இருப்பின் அது பற்றி 2024/01/12 திகதிக்கு முன்பதாக எழுத்து மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும்.

#### முதலாவது அட்டவணை

மொனராகலை நிருவாக மாவட்டத்தில் புத்தல பிரதேச செயலகப் பிரிவில் புத்தல கோரளையில் ஒக்கம்பிட்டிய கிராம அலுவலர் பிரிவில் ஒக்கம்பிட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் மொனராகலை நில அளவை அதிகாரியின் பொறுப்பிலுள்ள மொனராகலை நில அளவை அதிகாரியினால் தொகுக்கப்பட்ட இலக்கம் பி தளக்கோள இலக்கம் மொ/வீ/92/115 உடைய நிலத்துண்டாக காட்டப்பட்டுள்ளதும் அளவில் ஹெக்ரயார் 0.256 பரப்பளவுடையதும் கீழ் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் எல்லைகளையுடைய அரச காணி.

வடக்கு : வீதி இட ஒதுக்கீடு;
கிழக்கு : ஏ. ஆர். பீ. முதலிஹாமியின் காணி மற்றும் மொரிஸ் அப்புஹாமியின் காணி;
தெற்கு : மதுருகொட்டிய கால்வாய் இட ஒதுக்கீடு மற்றும் ஜேமிஸ் அப்புஹாமியின் காணி;
மேற்கு : வீதி இட ஒதுக்கீடு.

ஆர். எம். ஆர். எஸ். திலகரத்ன,
பிரதேச செயலாளர்,
புத்தல.

2023, யூலை 18.

12 -434

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 வது வாசகத்தின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச்செய்தல் (104 பிரிவு) தொடர்பான அறிவித்தல்

தென் மாகாண சபையின் காலி மாவட்டத்தில், நியாகம பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் டீ. ஜீ. எஸ். சஜீவனீ எனும் நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உபபிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதி அவர்களால் 1996.06.28 ஆம் திகதி வழங்கியுள்ள இலக்கம் 2/கா/13அ/43379 மற்றும் எல். எல். 30388 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான கொடாமுன வசிக்கும் பரண கங்கானம்கே தொன் செம்பினோனாவிடம் கையளித்து பலபிட்டி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தின்

*இலக்கம் LDO/ B15/48 இன் கீழ் 2005.11.02 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்காக சட்டபூர்வமான ஒரு உரிமையாளர் இல்லாதமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டிருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகிறேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2024.01.11 திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*காலி நிருவாக மாவட்டத்தில் நியாகம பிரதேச செயலாளர் பிரிவின் பெந்தர வலல்லாவிட்ட (தெற்கு) கோரளையில் 32 ஏ - மார்த்துபிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவின் கொடாமுண எனும் ஊரில் அமைந்துள்ளதுமான - பொறுப்பில் உள்ள மற்றும் அளவை நாயகத்தினால் தயாரித்த இலக்கம் - கொண்ட வெளிக்களத்தாளில்/ஆல் தயாரித்த இலக்கம் 578 கொண்ட கண்டமிடல் வரைபடத்தில் - ஆல் தயாரித்த இலக்கம் - கொண்ட காணி உரித்துப் படத்தில் இலக்கம் - கொண்ட காணித்துண்டாக காட்டப்பட்டுள்ளதுமான அளவில் 01 ஏக்கர் - றூட் - பேர்ச் அளவு கொண்டதுமான, பின்வருமாறு எல்லைகளையுடைய அரச காணி.*

*வடக்கு : எச். ஜீ. லுவிஸ்சிஞ்ஞொவின் காணி;*
*கிழக்கு : கஜனாயக்க பதிரகே பியசிரியின் காணி;*
*தெற்கு : வீதி மற்றும் ஓடை;*
*மேற்கு : ஜீ. பி. அலிசனின் காணி.*

*டீ. ஜீ. எஸ். ஸஜீவனீ,*
*பிரதேச செயலாளர்,*
*நியாகம.*

*2023, ஒற்றோபர் 06.*

*12 -475*

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

*இணைப்பு 09*

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது உப பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புச் செய்யப்பட்ட பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) இற்கான அறிவித்தல்**

*தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தின், ரத்கம பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர்/பிரதி காணி ஆணையாளர் (உள் மாகாண) ஜீ. ஜீ. லக்ஷ்மி காந்தி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்19 (4) ஆவது உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1982-04-28 ஆந் திகதி அன்பளிப்புச் செய்யப்பட்ட கா/2/பிர 52395 அன்பளிப்புப் பத்திரத்தின் உரித்துடையவரான இல. 56, பன்வில, ரத்கமையில் வசிக்கின்ற தடல்லகே ஹீன்நோனா என்பவருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட காலி காணி மற்றும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தின் இலக்கம் எல். ரீ. ஓ. C18/127 இன் கீழ் 1998.01.19 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ் உள்ள, கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டு உள்ள காணிக்கு பிரதிநிதி என்பதனால் சட்டரீதியாக உரித்துடையவர் எவரும் இல்லாத படியால் அல்லது உரிமை கோருகின்ற ஒருவர் இருந்தும் அவர்/அவன் பிரதிநிதியாக விருப்பம் இன்மையால் பிரதிநிதியாக எவரும் ஆஜராகாமை காரணமாக அவ் அன்பளிப்புப் பத்திரத்தின் மேல் உள்ள சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் மூலம் அறிவித்துக் கொள்கின்றேன். இது தொடர்பாக யாதேனும் ஒரு முறைப்பாடு காணப்படின், அதனை 2024.01.11 திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத் தரவும்.*

**அட்டவணை**

*காலி நிருவாக மாவட்டத்தில் ரத்தம பிரதேச செயலகப் பிரிவின் (தெற்கு) வெல்லபட பத்துவின்/கோரலே இலக்கம் 49பீ, பன்வில கிராம உத்தியோகத்தர் பிரிவின் பன்வில ஒன்றியம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள காலி நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட 0 18/26, 34, 42 ............ இலக்கம் கொண்ட களப் பத்திரத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலக்கம் ............ கொண்ட துண்டங்களாக உடைக்கப்பட்ட காலி நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்குபத்தப்பட்ட இலக்கம் ஆ. வ. கா 233*

கொண்ட வரைபடக் குறிப்பு 35 நிலத் துண்டுகளாக காட்டப்பட்டுள்ள அளவில் ஹெக்ரயார்/ஏக்கர் 00, றூட் 01, பேர்ச் 00 விசாலம் உள்ளதாக அளந்து மதிப்பீடு செய்யப்பட்டு உள்ள, கீழ் உள்ளவாறான எல்லைகளைக் கொண்டதுமாகும்.

வடக்கு : நுழைவு மார்க்கம் மற்றும் இத்திட்டத்தின் நிலத் துண்டு இலக்கம் 36;
கிழக்கு : இத்திட்டத்தின் நிலத் துண்டு இலக்கம் 34;
தெற்கு : நுழைவு மார்க்கம்;
மேற்கு : நுழைவு மார்க்கம்.

G. G. லக்ஷ்மி காந்தி,
பிரதேச செயலாளர்,
ரத்கம.

2023, ஓகத்து 07.

12 -476

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது உப பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புச் செய்யப்பட்ட பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) இற்கான அறிவித்தல்)**

தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தின், ஹபறாதூவ பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதி காணி ஆணையாளர் (உள் மாகாணம்) அக்குருகொட கமகே நெழும் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்19 (4) ஆவது உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்று ஆறாம் ஆண்டு பெப்புருவரி மாதம் இருபத்தொன்பதாம் திகதி (1996.02.29) அன்பளிப்புச் செய்யப்பட்ட (02)/கா/12பிர 39499 மற்றும் கா/ஹப/ 166/இ. லே. 755 ஆம் இலக்கம் கொண்ட அன்பளிப்புப் பத்திரத்தின் உரித்துடையவரான கொரஹெடிகொடயில் வசிக்கின்ற குடா விதானகே ஸவுதியஸ் சில்வா அவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட காலி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் D" 41, 91 இன் கீழ் 1997.02.14 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டு உள்ள காணிக்கு பிரதிநிதி என்பதனால் சட்டரீதியாக உரித்தடையவர் எவரும் இல்லாதபடியால் அல்லது உரிமை கோருகின்ற ஒருவர் இருந்தும் அவர்/அவள் பிரதிநிதியாக விருப்பம் இன்மையால் பிரதிநிதியாக எவரும் ஆஜராகாமை காரணமாக அவ் அன்பளிப்புப் பத்திரத்தின் மேல் உள்ள சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். இது தொடர்பாக யாதேனும் ஒரு முறைப்பாடு காணப்படின், அதனை 2024.01.11 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத் தரவும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின் காலி நிருவாக மாவட்டத்தின் ஹபறாதூவ செயலகப் பிரிவின் தல்பே பத்துவின் (தெற்கு) பத்வின்/கோரலே கொரஹெடிகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அட்டானிகித்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள இலக்கம் கா/ 91/243/ பீ இலக்கம் கொண்ட நிலத்துண்டின் 5 2/3 இலக்கம் கொண்ட நிலத்துண்டுகளாகக் காட்டப்பட்டுள்ளதுமான, அளவில் ஹெக்ரயார் 0.404 விசாலம் உள்ளதாக அளந்து மதிப்பீடு செய்யப்பட்டு உள்ள, தென்னஹேன என அழைக்கப்பபடுகின்ற கீழ் உள்ளவாறான எல்லைகளைக் கொண்ட அரச காணி எத்துன்கெலேவத்து:-

வடக்கு : ஜீ. பீ. எச். ஆரியதாச என்பவருக்குச் சொந்தமான காணி;
கிழக்கு : ஜீ. எச். கருணாபால என்பவருக்குச் சொந்தமான காணி;
தெற்கு : எத்துன் காட்டிற்குச் செல்லும் வீதி;
மேற்கு : பீ. டீ. பத்திரண அவர்களின் காணி.

நெலும் ஏ. கமகே,
பிரதேச செயலாளர்,
ஹபராதுவ.

2023, ஒற்றோபர் 18.

12 - 477

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/74301.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/6/BT/L/61.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மொணறாகலை மாவட்டம், புத்தள பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 142A, கொண்கெட்டிய கிராம அலுவலர் பிரிவின் கொண்கெட்டிய கிராமத்தின் குடியேற்ற உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட நில வரைபடத்தின் காணித்துண்டுகள் 80 மற்றும் 83 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 4.035 ஹெக்டயர் அளவுடைய அரச காணியினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு தேசிய உணவு மேம்பாட்டுச் சபையின் பணிப்பாளர் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

காணித்துண்டு இல. 80

வடக்கு : காணித்துண்டு இல. 78, 79;
கிழக்கு : காணித்துண்டு இல. 78, 81;
தெற்கு : காணித்துண்டு இல. 78, 84;
மேற்கு : காணித்துண்டு இல. 84.

காணித்துண்டு இல. 83

வடக்கு : காணித்துண்டு இல. 81, 79;
கிழக்கு : காணித்துண்டு இல. 79, 84;
தெற்கு : காணித்துண்டு இல. 84;
மேற்கு : காணித்துண்டு இல. 84, 81.

கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (2023.04.27 ஆம் திகதியிலிருந்து 2053.04.26 ஆம் திகதி வரை)

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- கௌர அமைச்சர் அவர்களினால் அனுமதி வழங்கப்பட்ட வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். கௌரவ அமைச்சர் அவர்களினால் அனுமதி வழங்கப்பட்ட வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது 05 வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்கள் முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.04.27 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகையானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத விடத்து செலுத்தப்படாத மிகுதித் தொகைக்காக 10% தண்டப் பணமானது அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி

வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுசானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 21.

12 - 431

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/67212.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: HDLC/02/40/06/51.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

ஹம்பாந்தோட்டை மாவட்டம், தங்கள்ள பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான குடாவெல்ல மேற்கு இலக்கம் 288, கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த குடாவெல்ல கிராமத்தின் HA/ TNG/ 2019/ 271 ஆம் இலக்க நிலவரைபடத்தின் துண்டு இலக்கம் A மூலம் காட்டப்பட்டுள்ளவாறான 0.0667 ஹெக்டயர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை சங்க நடவடிக்கைகளின் பொருட்டு குடாவெல்ல மேற்கு சணச சங்கத்தின் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : துண்டு இலக்கம் B மற்றும் FVP 303 இன் துண்டு இலக்கம் Q ;
கிழக்கு : பாதை ;
தெற்கு : FVP 303 இன் துண்டு இலக்கம் 64 ;
மேற்கு : FVP 303 இன் துண்டு இலக்கம் 64.

கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (அமைச்சர் அவர்கள் குத்தகையை அனுமதித்த 2022.11.16 முதல்)

(ஆ) **வருடாந்தக் குத்தகைப் பணம்**.- பிரதான மதிப்பீட் டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஆம் வருடத்தின் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை கரன்தெணிய பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊறகஸ்மன்ஹந்திய சங்கத்தின் நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கை களின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்கள் முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2022.11.16 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறை வடைவதற்கு முன்னர் குத்தகை வழங்கிய நோக்கத்தை நிறைவு செய்யும் நோக்கத்துக்காக துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத் தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப்

பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 15.

12 - 432

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/70250.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: SPLC/ GAL/01/05/03/01.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

காலி மாவட்டம், கரன்தெணிய பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 39, ஊறகஸ்மன்ஹந்திய தெற்கு கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த ஊறகஸ்மன்ஹந்திய கிராமத்தின் GA/ KRN/ 2021/ 327 ஆம் இலக்க நிலவரைபடத்தின் துண்டு இலக்கம் B மூலம் காட்டப்பட்டுள்ளவாறான 5.05 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு வரையறுக்கப்பட்ட கரன்தெணிய பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - ஊறகஸ்மன்ஹந்திய நீண்ட கால குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : PP மற்றும் 338 இன் துண்டு இலக்கம் 02 ;
கிழக்கு : இந்த நில வரைபடத்தின் துண்டு இலக்கம் A ;
தெற்கு : இந்த நில வரைபடத்தின் துண்டு இலக்கம் C ;
மேற்கு : PP மற்றும் 338 இன் துண்டு இலக்கம் 02.

கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (அமைச்சர் அவர்கள் குத்தகையை அனுமதித்த 2022.11.16 முதல்)

(ஆ) **வருடாந்தக் குத்தகைப் பணம்**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஆம் வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை கரன்தெணிய பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊறகஸ்மன்ஹந்திய சங்கத்தின் நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்கள் முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2022.11.16 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் குத்தகை வழங்கிய நோக்கத்தை நிறைவு செய்யும் நோக்கத்துக்காக துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 21.

12 - 433

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/70341.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: SPLC/
GAL/05/03/107.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

காலி மாவட்டம், கரன்தெணிய பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 39ஏ, ஊறகஸ்மனஹந்திய தெற்கு கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த வல்இங்குறுகெட்டிய கிராமத்தின் GA/ KRN/ 07/ 775 ஆம் இலக்க நிலவரைபடத்தின் துண்டு இலக்கம் A மூலம் காட்டப்பட்டுள்ளவாறான 0.969 ஹெக்டயர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை ரிபில்டீன் பவுன்டேசன் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பிரதேச சபை பாதை;
கிழக்கு : GA/ KRN/ 07/ 775 வரைபடத்தின் துண்டு இலக்கம் B ;
தெற்கு : PPA 1404 இன் துண்டு இலக்கம் 22 மற்றும் இந்த வரைபடத்தின் துண்டு இலக்கம் C ;
மேற்கு : பிரதேச சபை பாதை மற்றும் PPA 1404 இன் துண்டு இலக்கம் 22.

கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (2023.08.09 ஆந் திகதியிலிருந்து)

(ஆ) **வருடாந்தக் குத்தகைப் பணம்**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2023 ஆம் வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 1/ 2% ஆகும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) இக் காணியினை ரிபில்டிங் பவுன்டேசன் நிறுவனத்திற்கு கட்டடம் ஒன்றினை நிர்மாணிப்பது தவிர்ந்த வேறு நடவடிக்கைகள் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(i) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகையாளர் இக்காணியில் காணப்படும் மரங்கள் மற்றும் ஏனைய செடிகொடிகளைப் பாதுகாத்தல் வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான அனுமதியின்றி இக்காணியில் காணப்படும் மரம், செடி, கொடிகளை வெட்டி அகற்றுதல் கூடாது.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர", காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 21.

12 - 512

---

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/70258.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: SPLC/
GAL/02/01/03/128.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

காலி மாவட்டம், அக்மீமண பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 152பீ தலஹிட்டியாவ கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த பிளான கிராமத்தின் காணி உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட நில வரைபடத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறான 1.01 ஹெக்டயர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு திரு. எடேர ஆரச்சிகே தம்மிக என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : மொரகலவத்த வீதி;
கிழக்கு : தலஹிட்டியாவ தனியார் காணி ;
தெற்கு : மொரகலவத்த அரச காணி ;
மேற்கு : மொரகலவத்த பகிர்ந்தளிக்கப்பட்ட காணி.

கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால்

நியமிக்கப்பட்டகுறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (2023.04.11 ஆந் திகதியிலிருந்து 2053.04.10 வரை)

(ஆ) **வருடாந்தக் குத்தகை.-** 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது 05 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.04.11 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் குத்தகை வழங்கிய நோக்கத்தை நிறைவு செய்யும் நோக்கத்துக்காக துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப்பணத்தைச் செலுத்தத்தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 21.

12 - 513

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/73481.
மாகாணக் காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: EP/28/LB/L7/LS/BAT/MNP/06.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைப்பற்று பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான ஆரியம்பதி கிழக்கு 157 - சீ, கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த ஆரியம்பதி கிராமத்தின் நில அளவையாளர் திணைக்களத்தின் பி.பி.மட். 1423 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 0.4030 ஹெக்டயார் அளவுடைய நிலப் பகுதியினை அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சங்க நடவடிக்கைகளின் பொருட்டு மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தினர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பாதை (பிரதேச சபை) ;
கிழக்கு : பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லம் (பிரதேச செயலகம் மன்முனைப்பற்று);

தெற்கு : பிரதேச செயலகம் மண்முனைப்பற்று;
மேற்கு : பாதை (R.D.A.).

இக் காணியானது குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (2023.10.10 ஆந் திகதி முதல் 2053.10.09 வரை)

(ஆ) **வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரரின் மூலம் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்திப்படுமாறு காணியானது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(ஈ) குத்தகைகாரரின் மூலம் இக்காணியினை மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப் பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்கள் முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக் கப்படும்;

(ஏ) 2023.01.10 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னரை் துணைக் குத்தகை செய்ய அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இடைநிறுத்தப்படும் பட்சத்தில் குத்தகைக்கு சுயமாகவே செல்லுபடியற்றதாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியானது குத்தகைக்கு அனுமதித்தலாகாது என என்னும் பட்சத்தில் அவற்றுக்கான தகுந்த காரணங்களை எழுத்து மூலம் எனக்கு அறிவிக்காதவிடத்து காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம் சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 20.

12 - 528

---

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/73599.
மாகாணக் காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: EP/28/LB/L7/LS/BATI/MN/47.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 171, நொச்சிமுனை கிராம அலுவலர் பிரிவின் நொச்சிமுனை கிராமத்தின் குடியேற்ற உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட நிலவரைபடத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 20 பேர்ச் அளவுடைய அரச காணியினை உதயன் பார்வையற்றோர் சங்கத்தின் மூலம் குத்தகைள் மற்றும் கீழே றேிப்பிடப்படும் நிபந்தனை களுக்கு கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : அரச காணி ;
கிழக்கு : கல்வி அபிவிருத்திச் சங்கம்;
தெற்கு : சாரதா வீதி;
மேற்கு : அரச காணி.

இக் காணியானது குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (2023.10.10 ஆந் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

(ஆ) **வருடாந்தக் குத்தகைப் பணம்**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2023 ஆம் வருடத்தின் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 1/2% ஆகும்.

*தவணைக் கட்டணம் .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.*

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(ஈ) குத்தகைகாரர் இக்காணியினை உதயன் பார்வையற்றோர் சங்கம் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்கள் சிறந்த அபிவிருத்தியடைந்த முறையில் பேணப்பட வேண்டும்;

